ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## வதூவித்யாவிசார:

சோகத்தூர் ராமானுஜ தாஸன்

க்ஷேமம் 11.11.89

பெங்களூர்

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்பாதக ஸ்வாமி ஸன்னிதியில் அனந்த ப்ரணாம பூர்வக விஜ்ஞாபனம். ஶுக்ல வருஷம் புரட்டாசி மாதத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவில் ஸ்ரீ. உ.வே. வித்வான் புரிசை க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி எழுதிய 'ப்ரஹ்ம வித்யாதிகாரவிசாரம்' என்ற வ்யாஸத்தைக் குறித்து அடியேனுடைய அபிப்ராயத்தைக் கீழே தெரியப்படுத்தியிருக்கிறேன். அடியேன் 'க்ரந்தகாலக்ஷேபாதிகளை ஸாதித்துக் கொண்டு வரும் ப்ரஹ்மவித்து' அல்லாததால் இதை யதோசிதம் பராமர்ஶிக்கப் ப்ரார்த்திக்கிறேன்.

இங்குள்ள விசாரமாவது - தேவதாதிகரணந்யாயப்படி ஸ்த்ரீகளுக்கு ப்ரம்ஹவித்யையில் அதிகாரம் உண்டா அல்லது அபஶூத்ராதிகரணப்படி அவர்களுக்கு அதில் அதிகாரம் இல்லையா என்பது.

இதில் புரிசை ஸ்வாமி தேவதாதிகரண ந்யாயத்தைக் கொள்ள வேண்டும் என்று ஸாதிக்கிறார்.

இங்கு இந்த கட்டுரையில் சில விஷயங்கள் அஸ்பஷ்டமாக இருப்பதாகவும், மேற்கூறிய நிர்ணயம் கூடாது என்றும் அடியேன் பக்ஷம். இதில் உள்ள அஸ்பஷ்டமான அம்ஶங்களாவன -

1) 'த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் த்விஜாதியராகையால் அபஶூத்ராதிகரணந்யாயம் ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவ்ருத்திக்காது.' [என்றால் த்விஜர்களுக்கு வேதாத்யயனத்தில் அதிகாரம் உண்டாகையால்] 'வேதஶ்ரவணமும் கிஞ்சித் வேதாத்யயனமும் ஸித்திக்கக் குறையில்லை .... ஒரு ப்ரஹ்மவித்யையில் **இழிந்தால்** तदुपयोगिயான வேதாத்யயனாதிகளும் அர்த்தாபத்தி ப்ரமாணத்தால் அவர்களுக்கு ப்ராப்தமாகத் தட்டில்லை' என்றும் மேல் '**வேதாத்யயனம் பண்ண அதிகாரமில்லா**விடினும் அதன் அர்த்தஶ்ரவணத்தில் பாதகமில்லை என்று தோன்றுகிறது', 'ப்ரஹ்ம **வித்யையில்** ஸ்த்ரீகளுக்கு **அதிகாரமிருப்பதால்** ப்ரஹ்மஸூத்ர, தத் பாஷ்யாதி **ஶ்ரவணத்தில்** ஸ்த்ரீகளுக்கு **அதிகார**மிருப்பதாகவே மிதஜ்ஞனான அடியேன் எண்ணுகிறேன்' என்றும் எழுதியிருப்பதிலிருந்து வேதாத்யயனம் என்று எதைக் குறிக்கிறார்? ப்ரஹ்ம வித்யை என்று எதைக் குறிக்கிறார்? என்பதும் விளங்கவில்லை.

2) 'த்ரைவர்ணிகர்களான ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமுண்டா இல்லையா என்பதை ஶாரீரகஶாஸ்த்ரத்தில் விசாரிக்கவில்லை' என்பதால் ஸ்ரீஸ்வாமி தேஶிகனின் ந்யாயஸித்தாஞ்ஜன பங்க்தியின் கருத்தை எப்படி நிர்வஹித்திருக்கிறார் என்று விளங்கவில்லை.

3) விவாஹத்தை ஸ்த்ரீகளுக்கு உபநயமவாகவே சொல்லியிருப்பதாயிருந்தால் உபநீதர்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் ஆஶௌசவிஷயத்தில் காட்டும் ஒற்றுமை கூடாது. உபநீதர்களுக்கு ஜாத, ம்ருதாஶௌசங்கள் இல்லாத்தால் அஸ்ப்ருஶ்யஸ்பர்ஶமூலமான ஆஶௌசம் நியாமகமாகாதே.

4. 'स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा' என்ற ஸ்ம்ருதியின் முக்யார்த்தத்தை விடுவதற்கு ஶிஷ்டானுஷ்டானமே ப்ரமாணமாக எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ப்ரதிவக்தாக்களுக்கு இந்த ஸௌலப்யம் மறுக்கப்பட்டுள்ளது. ('ஶிஷ்டாசாரத்தைப் பற்றி எழுத வேண்டாம். அதைப் பற்றி யாவருமறிந்திருக்கிறார்கள்.')

இங்கு அடியேன் மேலுள்ள விஷயங்களைப் பற்றி சில ப்ரமாணங்களை உதாஹரிக்க இருக்கிறேன். (ஒரு வேடிக்கையான யுக்தி - ஸ்த்ரீகள் மனுஷ்யர்களில் சேர்ந்தவர்களாதலால் தேவதாதிகரணத்தை விட அபஶூத்ராதிகரணம் பொருந்தலாம். 'ஸ்த்ரீஶூத்ரர்கள்' என்று சேர்த்து வ்யவஹரிக்கப்படுவதால்.)

1) அத்யயனம் என்பதற்கு 'सत्सन्तानप्रसूतसदाचारनिष्ठात्मगुणोपेतवेदविदाचार्योपनीतस्य व्रतनियमविशेषयुक्तस्य गुरुमुखोच्चारणानूच्चारणपूर्वकमक्षरराशिग्रहणफलम्' என்று பாஷ்யோக்த லக்ஷணம்.

2) ப்ரஹ்ம வித்யை என்பது பகவத்ப்ராப்திக்கு உபாயமாக உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்டுள்ள த்யானம், உபாஸநம் முதலிய பதங்களால் சொல்லப்படும் பக்தியோகமாகிற ஜ்ஞானவிகாஸவிஶேஷம். இதில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்றும், இருந்தால் ஶ்ரவணத்தால் அதிகாரம் இருப்பது தெரிகிறதா? அதிகாரத்தால் ஶ்ரவணம் செய்வதா? என்றும் விசாரிக்கப்படவேண்டும்.

முதன்முதலில் 'ஸ்த்ரீகளுக்கு வேதஶ்ரவணநிஷேதகப்ரமாணம் இல்லாதாப் போலே வேதாத்யயன-நிஷேதகஸ்பஷ்டதர-ப்ரமாணமில்லை என்றே எண்ணுகிறேன்.' என்ற வாக்யத்தைப் பராமர்ஶிப்போம். நையாயிகர்கள் கல்பித்திருப்பதாக ஸ்வாமி எண்ணும் ப்ரமாணத்தை நாம் கொள்ள வேண்டாம். அது தவிர ஸ்பஷ்டபங்க்தி அடியேனுக்குத் தெரியவில்லை. ஸ்ம்ருதிகளில் 'गार्भैर्होमैः जातकर्मचौलमौञ्जीनिबन्धनैः। महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥' (मनुस्मृति 2.28) என்பது ப்ரஹ்மவித்யார்ஹதையைச் சொல்லுவதாகக் கொள்ளலாம். இதில் உபநயனத்தைப் பற்றி விஶேஷித்து விசாரிக்க வேணடும். 'उपनयनं विद्यार्थस्य श्रुतितः सङ्स्कारः ।', 'अशूद्राणाम् अदुष्टकर्मणाम् उपायनं वेदाध्ययनमग्न्याधेयं फलवन्ति च कर्माणि' (आ.ध.सू. 1.1.9,6) என்கிற ப்ரமாணங்களால் வித்யார்ஹதை சொல்லப்படுகிறது. இங்கு उपनयनं विद्यार्थस्य என்கிற ஸூத்ரவ்யாக்யானத்தில் ஹரதத்தர் (वेदभाष्यकारर्) '.... लिङ्गस्य विवक्षितत्वात् स्त्रिया अपि न भवति' என்கிறார். யாகங்களில் அதிகாரத்தைச் சொல்லும் போது 'यज्ञं व्याख्यास्यामः । स त्रयाणां वर्णानाम् ....' (आप.परि.सू. 1.1.1,2) என்ற ஸூத்ரங்களின் வ்யாக்யானத்தில் கபர்தி பாஷ்யம் 'यावन्तो मन्त्राः आधानादिषु पत्नीभिरुच्चार्याः, ते सर्वे ताभिरध्येतव्याः तासामप्युपनयनाभावात्' என்றுள்ளதால் உபநயனம் ஸ்த்ரீகளுக்குக் கிடையாது. ஆக பாஷ்யகாரோக்த லக்ஷணமான அத்யயனமும் கூடாது.

ஸ்த்ரீகளுக்கு விவாஹத்தை உபநயனத்துக்கு ஸமமாகக் கூறுவதாகக் கொள்ளலாம். 'तत्रास्य माता सावित्री पिता त्वाचार्य उच्यते ।' (म.स्मृ. 2.170) மற்றும் 'स हि विद्यातस्तं जनयति । तच्छ्रेष्ठं जन्म ॥' (आ.ध.सू. 1.1.16,17) என்று உபநயனத்தை இரண்டாவது (உயர்ந்த) பிறப்புக்கு ஹேதுவாகச் சொல்லி காயத்ரீ ப்ரபாவத்தை வர்ணித்து ப்ரணவாதிகளில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரமில்லையென்பதால் ஸ்த்ரீவிவாஹத்துக்கு உபநயன ஸாம்யமே உள்ளது. 'पतिसेवा गुरौ वासः गृहार्थाऽग्निपरिक्रिया' (मनुस्मृति 2.67) என்று குருகுல-வாஸத்துக்கு ரூபணமாக பர்த்தாவுக்கு செய்யும் ஶுஶ்ரூஷையையும், வீட்டுவேலைகளான சமையல் முதலியவற்றை அக்நிஹோத்ரமாகச் சொல்வதாலும் ஏற்படுகிறது. இதனால் விவாஹம் உபநயன-ஸம்ஸ்காரமாகாதென்று தெரிகிறது. 'संस्कारपरामर्शात्' என்கிற ஸூத்ரகதியை இதையிட்டு நோக்க வேண்டும். இதனாலேயே ஸ்த்ரீகள் த்விஜராவதும் தடுக்கப்படுகிறது.

யாகங்களிலும் ஸ்த்ரீகளுக்கு பரிமிதமான அந்வயமேயுள்ளதென்பது 'न स्त्री जुहुयात् । नानुपेतः ॥' (आ.ध.सू. 2.5.17,18) மற்றும் 'स्त्रियानुपेतेन क्षारलवणावरान्नसंसृष्टस्य च होमं परिचक्षते' (आ.गृ.सू. 1.3.8.3) என்றும் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாத்யோபாயஶோதநாதிகாரத்தில் 'இஸ்ஸமாராதநாதி க்ரமங்களில் அநதிக்ருதர்க்கும்' என்ற பங்க்தியின் ஸாரபோதினியில் 'जपस्तपस्तीर्थसेवा प्रव्रज्या मन्त्रसाधनम् । देवताराधनश्चेति स्त्रीशूद्रपतनानि षट् ॥' என்று உதாஹரிக்கப்பட்டுள்ளது. இத்துடன் ந்யாயஸித்தாஞ்ஜன பங்க்தியாகிய 'स्त्रीविधुराणामपि जपोपवासाद्यङ्गाधिकृतानां ब्रह्मविद्याधिकारोऽस्त्येव' என்பதை ஒப்பிடுவது. மேலும் இதே அதிகாரத்தில் 'ஸபரிகரமான விலக்ஷண பக்தியோகமாகிலிறே சிலர்க்கு விரோதமுள்ளது' என்றும் ஸாதிக்கப்பட்டுள்ளது. 'शास्त्रतः पर्युदासः' என்பதின் விஷயர் யாரென்பதும் விசாரார்ஹம்.

இனி வேதபாஷ்யகாரரான ஸாயணாசார்யர் ருக்வேதபாஷ்யாரம்பத்தில் 'वेदेऽधिकरी । स च त्रैवर्णिकः

पुरुषः । स्त्रीशूद्रयोस्तु सत्यामपि ज्ञानापेक्षायाम् उपनयनाभावेन अध्ययनराहित्यात् वेदेऽधिकारः प्रतिबद्धः । धर्मब्रह्मज्ञानं तु पुराणादिमुखेनोत्पद्यते । तस्मात् त्रैवर्णिकपुरुषाणां वेदमुखेनार्थज्ञानेऽधिकारः॥' என்றும் யஜுர்வேத பாஷ்யாரம்பத்தில் 'स्त्रीशूद्रयोः सत्युपायबोधार्थित्वे हेत्वन्तरेण वेदाधिकारप्रतिषेधात् । उपनीतस्यैवाध्ययनाधिकारं ब्रुवन्ननुपनीतयोस्तयोः वेदाध्ययनम् अनिष्टप्राप्तिहेतुः इति बोधयति । कथं तर्हि तयोः तदुपायावगमः? पुराणादिभिरिति ब्रूमः । अत एवोक्तम् - 'स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा । इति भारतमाख्यानं कृपया मुनिना कृतम् ॥' (श्रीमद्भागवते 1.4.25) इति । तस्मादुपनीतैरेव त्रैवर्णिकैः वेदस्य सम्बन्धः' என்றும் கூறியுள்ளது நோக்கத் தக்கது.

வேதத்தில் அதிகாரம் ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் இந்த இரண்டையும் பற்றி மேலும் சற்று விசாரிப்போம். பூர்வோத்தரகாண்டரூபமாக வேதத்தின் அர்த்தத்தை விசாரிப்பதாக மீமாம்ஸா-ஶாஸ்த்ரத்தை ஒரே ஶாஸ்த்ரமாகச் சொல்லும் நாம், ஸ்வாமி தேஶிகன் ஸாராவளியில் 'विध्युक्त्याऽधीत्य वेदान् विधिबल-विरतावन्यजादेव रागात् कृत्स्नं मीमांसमानाः क्रमश इति परब्रह्मचिन्तां तरन्ति । प्राप्ते तुर्ये युगेऽस्मिन् परिमितबलधीप्राणतद्विघ्नदृष्ट्या कालक्षेपाक्षमत्वात् कतिचन कृतिनः शीघ्रमन्ते रमन्ते ॥' என்று ஸாதித்தபடி கொண்டால், 'விதி ப்ராப்தமான அத்யயனத்தையும், ராகப்ராப்தமான கர்மமீமாம்ஸையையும் விட்டு' என்று शीघ्रमन्ते रमन्ते என்பதற்கு பொருள் கொண்டால் ஸ்த்ரீவிஷயமாகவும் இதாகலாம். ஸ்ரீபாஷ்யகாரரும் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாதிகாரம் 'अधीतसाङ्गसशिरस्कवेदस्य अधिगताल्पास्थिरफलकेवलकर्मज्ञानतया सञ्जातमोक्षा-भिलाषस्य' என்றும் '.... अधीतवेदः पुरुषः स्वयमेव प्रवर्तते' என்றும் ஸாதித்திருக்கும்படி த்ரைவர்ணிகபுருஷாதிகாரம் ப்ரஹ்மவித்யை என்று தான் வ்யாஸர் அபஶூத்ராதிகரணத்தில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரம் உண்டா என்று பூர்வபக்ஷம் கூட செய்து கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. (அதிகரணத்துக்கு 10 அங்கங்களாகச் சொல்லும் போது பூர்வபக்ஷ ஸாதகமான யுக்தியும் சேர்ந்திருக்கிறதே).

ஸ்வாமி தேஶிகன் ந்யாயபரிஶுத்தியில் ந்யாயவிஸ்தரம் என்கிற தர்ம்யமான வித்யாஸ்தானத்தில் அதிகாரி யார் என்று விசாரிக்கும் போதும் த்விஜர்களுக்குத் தான் வித்யாஸ்தானத்தில் அதிகாரம் என்று யுக்திகளுடன் ஸ்தாபித்திருப்பதும், இதில் மீமாம்ஸை அடங்கியிருப்பதும் கவனிக்கத் தகுந்தது. அந்த பங்க்திகளாவன 'नियताधिकारश्चायं द्विजानां न्यायविस्तरः । .... सर्वाधिकारमित्येतदसमीक्षितभाषितम् । कथमागमवृत्तान्तमनधीतागमा विदुः? ॥ ११ ॥ निषिद्धे प्रेरयंस्तान्वा कथं कारुणिको भवेत्? । .... श्रुत्यां ह्यनधिकारित्वात्तदन्यत्राव्यवस्थितेः ॥ १३ ॥ .... अथ त्रैवर्णिकैरुक्ते त्वन्यो विश्वसितीत्यपि ॥ १४ ॥ स्वयं न्यायविचारेऽस्य फलत्यनधिकारिता । .... चतुर्दशापि स्थानानि भगवान् धर्मविद्ययोः ॥ १६ ॥ न स्प्रष्टव्यानि शूद्रैरित्यब्रवीदाश्वमेधिके । 'अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः ॥ १७ ॥ पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश' । यान्युक्तानि मया सम्यग्विद्यास्थानानि भारत ॥ १८ ॥ उत्पन्नानि पवित्राणि पावनार्थं तथैव च । तस्मात्तानि न शूद्रस्य स्प्रष्टव्यानि कथंचन ॥ १९ ॥ इति ॥

तस्मादेतानि त्रैवर्णिकैरध्येतव्यानि । ..... ततश्च येषां कर्मब्रह्ममीमांसावसेयतत्त्वहितरूपप्रमेयचिन्ताधिकारः, तेषामेव तात्पर्यपर्यवसायितया धर्मविद्यास्थानाभिमतन्यायविस्तराधिकार इति सिद्धम् ॥' என்று.

இங்கு ந்யாயானுக்ருஹீதமான பூர்வோத்தரமீமாம்ஸாதிகாரம் த்ரைவர்ணிகர்களுக்கே என்று ஸ்பஷ்டமாகச் சொன்னதாலும் कथमागमवृत्तान्तमनधीतागमा विदुः என்கிற ஹேதுவினால் அத்யயனம் இல்லாதவர்கள் அத்யேயத்தை எப்படி விசாரிப்பார்கள் என்று ஸ்த்ரீகளுக்கு அநதிகாரம் ஸித்திக்கிறது. ஶ்ரவணத்தில் அனுமதி தான் ஶூத்ரர்களிடமிருந்து வ்யாவ்ருத்தி என்று தெரிகிறது. இதிலும் ப்ரமாணம் இல்லாமையும், ஸ்த்ரீகளுக்கு அனுபபத்திகாலத்தில் ஶ்ரவணம் அஸம்பவம் என்பதும் வ்யக்தம். இங்கு ஸாங்கோபாங்கமாக வேதாத்யயனத்துக்கு உபநயனம் மட்டுமின்றி உபாகர்ம முதலிய ஸம்ஸ்காரங்களும் தேவையாதலால் ஸ்த்ரீகளுக்கு விவாஹம் உபநயனஸத்ருஶம் என்றே த்ருஷ்டீக்ருதமாகிறது. 'महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः' என்று முன்னமே சொன்னோம். ஸ்ரீபாஷ்யகாரரும் 'तल्लब्धिस्तु विवेकविमोका-

भ्यासक्रियाकल्याणानवसादानुद्धर्षेभ्यः संभवान्निर्वचनाच्च' என்று ப்ரமாணம் காட்டிக், க்ரியையாவது 'पञ्चमहायज्ञाद्यनुष्ठानं शक्तितः क्रिया' என்று ஸாதித்திருப்பதால் ஸ்த்ரீகளுக்கு விலக்ஷண பக்தியோகாதிகாரம் சொல்ல வொண்ணாது.

இனி வேதத்தில் கர்மகாண்ட, உபநிஷத் பாகங்களிலெல்லாம் அதிகாரிவிஷயமாக சொல்லப்படும் புல்லிங்கவாசகங்கள் தத்பரங்களா இல்லையா என்று விசாரித்து நிர்ணயம் செய்ய பூர்வமீமாம்ஸா-ந்யாயத்தைக் கவனிப்போம். இதுவும் உபாதேயமென்பது ஐகஶாஸ்த்ர்யத்தாலும், ஸாராவளியில் ஸ்வாமி தேஶிகன் 'आक्षिप्य स्थापनीयाः कतिचिदिह नयाः पूर्वकाण्डप्रणीताः केचित् व्युत्पादनीयाः क्वचिदपवदनं ख्याप्यमौत्सर्गिकस्य । इत्थं सर्वत्र चिन्ताक्रम इति समतां वीक्ष्य मध्यस्थदृष्ट्या शास्त्रैक्ये पौनरुक्त्यप्रभृतिपरिहृतिः सावधानैः विभाव्या ॥' என்றருளிச் செய்துள்ளபடியாலும் தெரிகிறது.

ஸேஶ்வரமீமாம்ஸையில் தர்மஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ஸ்வாமி ஸாதித்திருப்பது '.... यद्वा ब्रह्मचारिधर्मवत् हितैषिवाक्यानुसारेण भवतु अविचारितकर्मणोऽपि प्रथममग्निहोत्रादिप्रवृत्तिः । हितैषिवाक्यादनुष्ठानेऽपशूद्रनयविरोध इति चेन्न; अगृहीतमन्त्रादेरनधिकारात् । तत्परिग्रहस्य च त्रैवर्णिकविषयोपनयनाङ्गकाध्ययनसाध्यत्वात् । 'न शूद्राय मतिं दद्यात्' इत्यादिनिषेधाच्च । सूत्रितं च शारीरके, 'श्रवणाध्ययनार्थप्रतिषेधात्' इत्यादि । .... चतुर्वर्गफलोपायविचारोऽध्ययनादनु । तत एव बुभुत्सातः प्राप्तोऽवसरलाभतः ॥ ८ ॥ विचारात्पूर्वमेवात्र प्राप्तमध्ययनं विधेः । अतोऽनधीतवेदस्य विचारश्शास्त्रबाधितः ॥ ९ ॥ क्रमो विंशतिलक्षण्यां न वैधः किन्तु लौकिकः । अतो व्युत्क्रमचिन्तायामनौचित्यं प्रशिष्यते ॥ १० ॥ என்று.

இனி பூர்வமீமாம்ஸையில் ஆறாவது அத்யாயம் அதிகாரிவிசாரத்தைச் செய்ய ஏற்பட்டிருப்பதால், அதிலும் முதல் பாதம் முழுக்க கர்மத்தில் அதிகாரம் யாருக்கு? என்ற விசாரத்திற்காக உள்ளதால் அதைக் கணிசிப்போம்.

இங்கு க்ரமமாக கர்த்தாவுக்கு யாகம் முதலிய கர்மாக்களில் அதிகாரம் உண்டு, அது குருடர் முதலியவர்களுக்குக் (அஶக்தர்களுக்குக்) கிடையாது, ஸ்த்ரீக்கு உண்டு, அதுவும் பர்த்தாவுடன் சேர்ந்தே தான் உண்டு, முதலிய விஷயங்கள் விசாரித்து நிர்ணயிக்கப்படுகின்றன. அதில் ஆறாவது அதிகரணத்தில் (पुंस एव उपस्थानाद्यधिकाराधिकरणम् அல்லது याजमानमिति समाख्यातानां पत्नीकर्तृत्वाभावाधिकरणम्) 'तस्या यावदुक्तमाशीर्ब्रह्मचर्यमतुल्यत्वात्' (जै.सू. 6.1.24) என்ற ஸித்தாந்தஸூத்ரம் உள்ளது. இங்கு விசாரிக்கப்படுவது, யஜமானன், பத்னீ இருவருக்கும் கர்த்ருத்வம் ஸித்தித்திருப்பதால் 'யாஜமானம்' என்று சொல்லப்படும் ஸூர்யனுடைய உபஸ்தானம் அனுமந்த்ரணம் முதலிய ஸமந்த்ரகங்களாகச் செய்ய வேண்டிய கர்மாக்களில் இருவருக்கும் அதிகாரம் உண்டா என்பது. இருவருக்கும் அதிகாரம் என்று பூர்வபக்ஷம். யஜமானனுக்கு மட்டும் அதிகாரம் என்று ஸித்தாந்தம். ஹேது, பத்னீக்கு அத்யயனத்தில் அதிகாரம் இல்லாததால் என்று. இது விஷயமான ஶாபரபாஷ்ய வாக்யங்களாவன - 'तस्याः .... अतुल्यत्वात् ॥ दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत, ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेतेत्येवमादिष्वेतदुक्तं स्त्रीपुंसयोः सहाधिकार इति, अथेदानीं सन्दिह्यते - किं सर्वं याजमानं पत्न्या कर्तव्यमुत यावदुक्तमाशीर्ब्रह्मचर्यं चेति । किं प्राप्तं? सर्वं 'याजमानं' पत्न्यास्स्यात् । सापि हि यजमना । तुल्यत्वात् । तस्मात्सर्वं तस्या इति । एवं प्राप्ते ब्रूमः - तस्या यावदुक्तं स्यात् । वचनप्रामाण्यात् । आशीः, ब्रह्मचर्यं च स्यात् । कस्मात्? अतुल्यत्वात्। अतुल्या हि स्त्री पुंसा । यजमानः पुमान् विद्वांश्च । पत्नी स्त्री चाविद्या च । किमतो यद्येतदतुल्यत्वम्? एतदतो भवति - क्रत्वर्थेषु यानि याजमानानि श्रवणानि, तेषूपादेयत्वेन श्रवणाद्विवक्षितं लिङ्गम् । तेन तेषु पत्नी न स्यात्। यानि च क्रत्वर्थानि समन्त्रकाणि तेष्वविद्यत्वात्पत्नी न स्यात् । तत्पत्न्या अध्ययनस्य प्रयोजकं स्यादिति यदुच्येत तन्न । असत्यपि प्रयोजकत्वे तस्य निर्वृत्तिः भविष्यति । अस्ति हि तस्य पुमान्निर्वर्तकः ।

यच्च क्रत्वर्थं, तदेकेन येनकेनचिन्निर्वर्तयितव्यम् । तस्मात्प्रतिषिद्धस्य पत्न्या अध्ययनस्य पुनः प्रसवे न किञ्चिदस्ति प्रमाणम् । अतस्तदपि पत्नी न कुर्यात् । यास्त्वाशिषो, यच्च ब्रह्मचर्यं, तत्पुरुषं प्रति गुणभूतम् । न तत्र अन्यतरेण कृते सिध्यति । अन्यतरस्य हि संस्कारो हीयेत । न च तत्रोपादेयत्वेन यजमानस्य श्रवणम् । तस्माल्लिङ्गमप्यविवक्षितम्।

अत आशीर्ब्रह्मचर्यं च उभयोरपि स्यात् । यच्चाऽऽहत्योच्यते । यथा पत्न्याज्यमवेक्षते इति । तस्मादतुल्यत्वात् असमानविधाना पत्नी यजमानेन भवितुमर्हतीति ॥

*இங்கு குமாரிலபட்டரின் டுப்டீகையில்* '.... न चान्यथानुपपत्त्या (आशीर्वचनान्यथानुपपत्त्या) अध्ययनं तस्याः । अन्यथाप्युपपद्यमानत्वात् । पुंविद्वत्तयैव । अतः (न्यायादेव सिद्धमनध्ययनं स्त्रियाः, अतः) प्राप्तोऽध्ययन-प्रतिषेधः । अथवा स्मृतेः प्रतिषेधः ।' *என்பது குறிக்கொள்ளத்தக்கது.*

*இந்த ஸூத்ரத்துக்கு கண்டதேவன் எழுதிய பாட்டதீபிகையில்* '.... यत्र तु याजमानमिति विशेषसमाख्यया कर्तृनियमः तत्र यजमानप्रातिपदिकस्योभयपरत्वोपपत्तेः विरूपैकशेषाङ्गीकारेण द्विवचनबहुवचनान्तविग्रहेण च उभयोरपि वैकल्पिकं कर्तृत्वमिति प्राप्ते - यजमानशब्दस्य पुंस्येव प्रचुरप्रयोगात् विरूपैकशेषद्विवचनान्तादिविग्रहस्य असति तत्तात्पर्यग्राहकप्रमाणे अनाश्रयणीयत्वात् । .... यद्यपि स्वाध्यायविधौ लिङ्गविशेषानुपादानेन न स्त्रिया व्यावृत्तिप्रतीतिः, तथाप्युपनयनवाक्ये तदुपादानात्तत्र च तस्योद्देश्यविशेषणत्वेऽपि अष्टवर्षादिवदेव 'तमध्यापयीत' इत्यत्र तच्छब्देन पुंस्त्वोपादानात् अध्ययने तद्व्यावृत्तिः । अत्र ह्यध्यापनस्य रागप्राप्तत्वात् लक्षणया प्रयोज्यव्यापाररूपाध्ययने एव कर्तृविधिः । .... अत उपनयनविधौ लिङ्गस्याविवक्षायामपि अध्ययने तस्य विवक्षितत्वात् न स्त्रिया अधिकारः । 'स्त्रीशूद्रद्विजबन्धूनां न त्रयी श्रुतिगोचरा' इति प्रतिषेधाच्च । अतश्च ज्ञानाक्षेपकल्पना भिया यजमानस्येदमित्येव विग्रहात् तस्यैव तत्र कर्तृत्वम् ।' *என்றுள்ளதாலும் இது ஸ்பஷ்டம்.*

*இந்த அதிகரணத்துக்கு ஸாயணாசார்யரின் ஜைமினீயந்யாயமாலா மற்றும் அவரே பண்ணிய அதன் விஸ்தரவசனங்கள்* - 'उपस्थानादि दम्पत्योरुत पुंसो द्वयोरिदम् । यजमानत्वसाम्येन, विद्वत्त्वात्पुंस एव तत् ॥' *என்றும்* 'अध्ययनरहिततया स्त्रियां तदनुष्ठातुमशक्यत्वात् .... पुंस एवोपस्थानादिकं' *என்றும் உள்ளன.*

*மேல் பூர்வமீமாம்ஸையிலும் அபஶூத்ராதிகரணம் விஸ்தாரமாக அமைந்துள்ளது. அங்கு* 'त्रिवर्णैर्वेदविद्वद्भिः कृतार्था विधयः क्रतोः । नाऽऽक्षिपन्ति चतुर्थस्य विद्यां तद्यष्टता कुतः ॥' *என்றும் ஜைமினீயந்யாயமாலையிலும்* लिखितपाठादिना, तात्कालिकाचार्योपदेशेन वा शूद्रस्याप्यनुष्ठानहेतुभूतविद्यासंभवाच्छूद्रोऽपि यागाधिकारी इति चेन्मैवम् । क्रतुविधिवैयर्थ्यपरिहाराय हि शूद्रस्याविहितापि विद्या कल्प्यते (ल्प्येत) । क्रतुविधयश्च त्रैवर्णिकानुष्ठानेनैव चरितार्थाः सन्तो न शूद्रस्य विद्यां कल्पयन्ति । त्रैवर्णिकानां तु विद्या न कल्पनीया, अध्ययनविधिनैव विहितत्वात्। तस्मात् न शूद्रस्य यागाधिकारः ॥' *என்று விஸ்தரத்திலும் உபபாதிக்கப்பட்டபடி ஸ்த்ரீகளுக்கு அத்யயனம், அதையடியாக உடைய ப்ரஹ்மவித்யை, அதன் சிந்தனரூபவிசாரம் முதலியன கல்பிக்கத் தக்க ப்ரமாணங்கள் இல்லை.*

*மேலும் இங்கு அபஶூத்ராதிகரணத்தில் வேதத்தில் கண்டோக்தியாகச் சொல்லப்பட்டதால் த்ரைவர்ணிகபுருஷர்களுக்கு அதிகாரமும், ஶூத்ரனுக்கு விதி இல்லாததாலும்* 'तस्माच्छूद्रो यज्ञेऽनवक्लृप्तः' (तै.सं. 7.1.6) *என்று நிஷேதத்தாலும் வேதம் த்ரைவர்ணிகபுருஷாதிகாரம் என்று நிர்ணயிக்கப்பட்டது.*

*ஶாரீரகத்தில் ப்ராஸங்கிகமாக மனுஷ்யாதிகாரம் என்று சொன்னால்* 'आजहारेमाश्शूद्र अनेनैव मुखेनालापयिष्यथाः....' *என்கிற உபநிஷத்வாக்யத்தினால் ஶூத்ரனுக்கும் வித்யாதிகாரம் ஆக்ஷேபிக்கப்படுகிறது என்று பூர்வோத்தரகாண்டநிர்ணயஸங்கதி கூடுகிறது. பூர்வமீமாம்ஸையில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரம் இல்லையென்று தேரியதற்கு அக்ஷேபகமான ஶ்ருதிவாக்யமில்லாததால் ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரசர்ச்சை ஶாரீரகத்தில் ஏற்படவில்லை.*

*இங்கு கீழ்க்காட்டியபடி வேதவிதிகளில் எங்கு லிங்கம் விவக்ஷிதமென்கிறதற்கு நியாமகங்கள் பூர்வமீமாம்ஸஸித்தமாயிருப்பதால் உபநிஷத்திலும்* 'वेदमनूच्याचार्योऽन्तेवासिनमनुशास्ति । .... मातृदेवो भव । पितृदेवो भव ।' *முதலிய இடங்களிலும்,* 'यो वेद निहितं गुहायां परमे व्योमन् ।' *என்றெல்லாம் புல்லிங்கவிதானம் விவக்ஷிதம் என்றேர்பட்டு ப்ரஹ்மவித்யாதிகாரம் த்ரைவர்ணிகபுருஷாதிகாரம் என்று காட்டுகிறது.*

இனி ந்யாயஸித்தாஞ்ஜனஸ்ரீஸூக்தியை பராமர்ஸிப்போம். இங்கு 'स्त्रीविधुराणामपि जपोपवासाद्यङ्गाधिकृतानां ब्रह्विद्याधिकारोऽस्त्येव' என்ற பங்க்திக்கு வ்யாக்யாதாக்கள் மைத்ரேயி, ரைக்வர்களை உதாஹரித்திருந்தாலும், இங்கு உபநிஷத்பாஷ்யகாரர் வ்யாக்யானத்தில் அவதாரிகை 'अन्तरा चापि तु तद्दृष्टेः' என்ற ஸூத்ரார்த்தத்தை திருவுள்ளத்தில் கொண்டு கூறிகிறார் என்றிருப்பதால், இது பொருந்தாததை உ.வே. அபிநவதேஸிக ஸ்வாமி டிப்பணியில் விது(து)ராதிகரணத்தில் ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் விசாரிக்கப்படவில்லை என்றும் உபநிஷத்பாஷ்யத்தில் காணப்படுவதாகவும் கூறயுள்ளாதால் இதுவும் அந்யதா நிர்வஹிக்க முடியலாம். இதற்கு ஒரு வழி - மைத்ரேயிவிஷயத்தை வ்யக்திவிஶேஷவிஷயமாக நியமிக்கலாம். அல்லது காலவிஶேஷப்ரயுக்ததர்மமாக உபபாதிக்கலாம். 'पुराकल्पे तु नारीणां मौञ्जीबन्धनमिष्यते' என்ற ஸ்ம்ருதிப்படி இது கூடும். (இங்கும் ஒரு வேடிக்கையான ஸமாதானம். स्त्रीविधुराणां = स्त्रिया विधुरणाम् । அதாவது स्त्रीविधुराणां என்று விது(து)ரர்களையே குறிப்பதாகச் சொல்லலாம்.) மேலும் जपोपवासाद्यङ्गाधिकृतानाम् என்கிற ஹேதுவை பராமர்ஸித்தால் கீழே காட்டிய ரஹஸ்யத்ரயஸாரபங்க்திவிரோதம் பரிஹரிக்க வேண்டியதாகிறது. எப்படியும் ப்ரஹ்மவித்யை என்று பக்தியோகத்தையே சொல்ல வேண்டியதால் இப்படிப்பட்ட க்லேஶங்கள் அநிவார்யங்கள். அல்லது 'अत्र ब्रूमस्सदुक्तौ न वयमिह मुधा बाधितुं किञ्चिदर्हाः निर्वाहस्तूपचारात्क्वचिदिति घटते ह्येकतात्पर्ययोगः' என்று ஸாராவளியில் ஸ்வாமி ஸாதித்தபடி இந்த ஸூக்திக்காக உதாஹ்ருத ந்யாயபரிஶுத்தி, ஸேஶ்வரமீமாம்ஸை, ஸாராவளி, ரஹஸ்யத்ரயஸார, ஸ்ரீபாஷ்யாதி பங்க்திகளை யதோசிதம் நிர்வஹிப்பது.

இவ்வளவால் ஸ்ரீபாஷ்யாதிஶ்ரவணம் ஸ்த்ரீகளுக்குக் கூடுமானாலும் வேதாத்யயன, ப்ரஹ்மவித்யாதிகாரங்கள் கூடாதென்று அடியேனுடைய அபிப்ராயம். இதற்கு மேல் விபஶ்சித்தமர்களான வித்வான்கள் ப்ரமாணம்.

வாசிகதோஷ: க்ஷந்தவ்ய:

श्रीः ।

## விமர்ஶ பராமர்ஶம்

*(மேற்கண்ட வ்யாஸத்திற்கு ஸ்ரீ உ.வே. புரிசை ந. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி அனுக்ரஹித்த விமர்ஶனம்)*

2.11.90

கேள்வி - (1) வேதாத்யயனம் என்று எதைக் கூறுகிறார்? ப்ரம்ஹவித்யை என்று எதைக் கூறுகிறார் என்பது விளங்கவில்லை.

பதில் - 'வேதாத்யயனம் பண்ண அதிகாரமில்லாவிடினும்' .... 'ப்ரம்ஹவித்யையில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரமிருப்பதால்', என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இரண்டும் வெவ்வேறு என்று ஸ்பஷ்டமாகத் தெரியவில்லையா? இதில் குழப்பத்திற்கு காரணம் என்ன? நான் விளக்கமில்லாமல் கூறியிருக்கிறேனா? (ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேபம் பண்ணியவர்களுக்கு விவாதத்தின் போது இவ்வளவு தானே குறிப்பிடமுடியும்.) உமக்கு விளங்கவில்லையா? நீரே பிறகு விவரித்து உள்ளீரே!